செ.கு.எண்: 105 நாள்:12.12.2021

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி

கொடை வள்ளல் டாக்டர் KV.AL.RM. அழகப்பச் செட்டியார் அவர்களின் புதல்வியும், அழகப்பா பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினருமான டாக்டர் உமையாள் ராமநாதன் அவர்கள் திடீரென மறைவெய்தினார் என்ற துயரச் செய்தி கேட்டு மிகுந்த மன வருத்தத்திற்கு உள்ளானேன். தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காகத் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் அர்ப்பணித்துள்ள குடும்பத்தின் வழித்தோன்றலான திருமதி உமையாள் ராமநாதன் அவர்கள், பெண்களின் கல்வி முன்னேற்றத்திலும், சமூகத் தொண்டிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் ஆவார். கல்வி நிறுவனங்கள் மூலம் புதிய தலைமுறையை உருவாக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த அவரது திடீர் மறைவு பேரிழப்பு ஆகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் - ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**